வணக்கம்

ஆகாஷ்வாணி-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர் : கிருஷ்ணமூர்த்தி ராமசுப்ரமணியன்

தேதி 22.12.2025 நேரம் மாலை 6.10 மணி

---

தலைப்புச் செய்திகள்

இந்தியாவிற்கும், நியூசிலாந்திற்கும் இடையிலான, வரியில்லா வர்த்தக உடன்பாட்டினால், அடுத்த 5 ஆண்டுகளில் இருதரப்பு வர்த்தகம், 2 மடங்காக அதிகரிக்கும் என்று, பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

நியூசிலாந்தின் அதிநவீன வேளாண் தொழில்நுட்பங்கள் இந்தியாவிற்கு கிடைக்கும் வகையில், தகைசால் மையங்கள் அமைக்கப்படும் என்று மத்திய தொழில்-வர்த்தக அமைச்சர் திரு. பியூஷ் கோயல் தெரிவித்துள்ளார்.

வெளியுறவு அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர், பிரதமரின் சிறப்பு தூதராக நாளை இலங்கை செல்ல இருக்கிறார்.

முன்னேறிய நாடாக இந்தியாவை மேம்படுத்தும் கனவை நனவாக்குவதில், அரசு ஊழியர்கள் முக்கிய பங்காற்றுவார்கள் என்று, குடியரசுத் துணைத் தலைவர் திரு.சி.பி ராதாகிருஷ்ணன் கூறியுள்ளார்.

----------------------------

மோடி உடன்பாடு 1 (4)

இந்தியாவிற்கும், நியூசிலாந்திற்கும் இடையிலான, வரியில்லா வர்த்தக உடன்பாட்டினால், அடுத்த 5 ஆண்டுகளில், இருதரப்பு வர்த்தகம், 2 மடங்காக அதிகரிக்கும் என்று, பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார். இதுகுறித்து கூடுதல் விவரங்கள்....

(வாய்ஸ்)

மோடி உடன்பாடு 2 (12)

(வாய்ஸ்)

இந்தியாவிற்கும், நியூசிலாந்திற்கும் இடையிலான, வரியில்லா வர்த்தக உடன்பாட்டினால்,இருநாடுகளுக்கும் இடையிலான கூட்டாண்மை உறவுகளும், புதிய உயரங்களை எட்டும் என்று, சமூக ஊடகப் பதிவு ஒன்றில் பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார். இந்தியாவின் பல்வேறு துறைகளில், மொத்தம் 20 பில்லியன் டாலர் முதலீடு செய்ய, நியூசிலாந்து முன்வந்து இருப்பதை, இந்தியா வரவேற்பதாகவும், இந்தியாவில் திறமை வாய்ந்த இளைஞர்களும், துடிப்பான ஸ்டார்ட்-அப் சூழல், மற்றும், சீர்திருத்தக் கொள்கைகளும் இருப்பதால், வளர்ச்சிக்கு, வலுவான அடித்தளம் கிடைக்கும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். இந்தியாவும், நியூசிலாந்தும், கல்வி, விளையாட்டு, கலாச்சாரம் உள்ளிட்ட துறைகளிலும், ஒத்துழைப்பை தொடர்ந்து வலுப்படுத்திக் கொள்ளும் என்று, பிரதமர் கூறியுள்ளார்.

----------------------------

இந்தியா – நியூசிலாந்து 1 (18)

முன்னதாக, இந்தியாவிற்கும், நியூசிலாந்துக்கும் இடையே, வரியில்லா வர்த்தக ஒப்பந்தம் பற்றிய பேச்சு வார்த்தைகள் வெற்றிகரமாக முடிவடைந்து இருப்பதை, மத்திய தொழில்-வர்த்தக அமைச்சர் திரு. பியூஷ் கோயல், இன்று புதுடெல்லியில் செய்தியாளர்களிடம் அறிவித்தார். உத்தேச வரியில்லா வர்த்தக உடன்பாட்டினால், வர்த்தகம், சுற்றுலா, கல்வி, புதுமையாக்கம் உள்ளிட்ட துறைகள் பெரிய அளவில் பயன்பெறும் என்றும், சேவைத் துறையில், குறிப்பாக கால்நடை வளர்ப்போர், மற்றும், விவசாயிகளின் உற்பத்தித் திறன் மேம்பட்டு, வருமானம் அதிகரிக்கும் என்றும், அவர் கூறினார். விவசாயிகள், மாணவர்கள், பெண்கள், மற்றும், தொழில் முனைவோருக்கு பல புதிய வாய்ப்புகள் ஏற்படும் என்றும், இளைஞர்கள், உலக அளவில் பயின்று, பணிபுரிந்து, வளர்ச்சி பெற ஏதுவாகும் என்றும் அவர் தெரிவித்தார்.

நியூசிலாந்தின் அதிநவீன வேளாண் தொழில்நுட்பங்கள் இந்தியாவிற்கு கிடைக்கும் வகையில், இந்தியாவில், தகைசால் மையங்கள் அமைக்கப்படும் என்றும், இந்தியாவின் ஏற்றுமதி பொருட்களுக்கு, நியூசிலாந்தில் முழு வரிவிலக்கு அளிக்கப்படும் என்பதால், சிறு-குறு, மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் உட்பட, அனைத்துத் தரப்பினரும் பயன்பெறுவார்கள் என்றும், அவர் தெரிவித்தார்.

*இந்தியா– நியூசிலாந்து* 2 (12)

அமெரிக்கா உடன், வரியில்லா வர்த்தக ஒப்பந்தம் குறித்த, இந்தியாவின் பேச்சு வார்த்தைகள் முன்னேறிய கட்டத்தில் இருப்பதாகவும், கனடாவுடன் இதே போன்ற பேச்சு வார்த்தைகள் விரைவில் தொடங்கும் என்றும், அமைச்சர் மேலும் கூறினார்.

நியூசிலாந்துடன், வரியில்லா வர்த்தக ஒப்பந்தம் குறித்து, கடந்த மார்ச் மாதம் தொடக்கப்பட்ட பேச்சு வார்த்தைகள், தற்போது வெற்றிகரமாக முடிவடைந்து இருப்பதும், 2047ஆம் ஆண்டிற்குள், முன்னேறிய நாடாக இந்தியாவை மேம்படுத்தும் நோக்கத்திற்கு ஏற்ப, மிக விரைந்து இறுதி செய்யப்பட்டுள்ள வரியில்லா வர்த்தக ஒப்பந்தமாக இந்த ஒப்பந்தம் அமைவதும் குறிப்பிடத்தக்கது. இந்தியாவின் ஆயுஷ் மருத்துவ முறைகளை, சர்வதேச அளவில் பிரபலப்படுத்தி, உலகின் உடல்நலக் கேந்திரமாக இந்தியாவை மேம்படுத்தவும், இந்த உடன்பாட்டில் முக்கியத்துவம் அளிக்கப் பட்டுள்ளது.

---------------------------

*உர்ஸ்* (8)

ராஜஸ்தான் மாநிலம், ஆஜ்மீர் ஷெரீஃப் தர்க்காவில், தற்போது நடைபெற்று வரும், வருடாந்திர உர்ஸ் திருவிழாவை ஒட்டி, மத்திய சிறுபான்மையினர் விவகாரங்கள் துறை அமைச்சர் திரு. கிரண் ரிஜிஜூ, இன்று பிரதமர் திரு. நரேந்திர மோடி சார்பில், பாரம்பரிய முறையில் சாதர் சமர்ப்பித்தார். தொடர்ந்து, புலந்த் தர்வாஜாவில் நடைபெற்ற நிகழ்ச்சியில், விழாவிற்க்கான பிரதமர் திரு. நரேந்திர மோடியின் செய்தி

வாசிக்கப்பட்டது. விழாவை ஒட்டி, தர்க்கா மற்றும் அதை சுற்றியுள்ள பகுதிகளில், போலீஸ் பாதுகாப்பு வலுப்படுத்தப்பட்டு இருந்தது.

---------------------------

வடகிழக்கு (14)

வடகிழக்கு பிராந்தியத்தின் வளர்ச்சிக்கான மத்திய அமைச்சர் திரு. ஜோதிராதித்யா சிந்தியா, இன்று புதுடெல்லியில், வடகிழக்கு மாநிலங்களுக்கான, உள்கட்டமைப்பு, மற்றும், போக்குவரத்து இணைப்புத் திட்டங்கள் குறித்து, உயர்நிலை பணிக் குழுக் கூட்டம் நடத்தினார். திரிபுரா முதலமைச்சர் டாக்டர் மாணிக்க சகா, மிசோரம் முதலமைச்சர் திரு. லால்தூ ஹோமா, மற்றும், சிக்கிம் மாநிலத்தின் தொழில் வளர்ச்சித் துறையினர், இக்கூட்டத்தில் கலந்து கொண்டனர். இந்தியாவின் கிழக்கு நோக்கிய கொள்கைக்கு ஏற்ப, அஷ்டலட்சுமி மாநிலங்கள் என்னும் 8 வடகிழக்கு மாநிலங்களை, தென்கிழக்கு ஆசியாவிற்கான இந்தியாவின் தலைவாசலாக, மாற்றுவதற்கான பல்வேறு திட்டங்கள் குறித்து, இக்கூட்டத்தில் ஆலோசிக்கப்பட்டது. வடகிழக்கு மாநிலங்களில், வளர்ச்சிக்கான புதிய வாய்ப்புகளை திறந்து விடும் வகையிலான, மல்டி-மோடல் போக்குவரத்துத் திட்டங்கள் மற்றும், டிஜிட்டல் இணைப்புத் திட்டங்கள் குறித்தும், மறு ஆய்வு செய்யப்பட்டது.

---------------------------

ஜெய்சங்கர் இலங்கை (8)

வெளியுறவு அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர், பிரதமரின் சிறப்பு தூதராக நாளை இலங்கை செல்ல இருக்கிறார். அவர் இப்பயணத்தின் போது இலங்கை தலைவர்களை சந்திப்பார் என்று, வெளியுறவு அமைச்சகம் தெரிவித்துள்ளது. இலங்கையில் டித்வா புயலால் ஏற்பட்ட சேதங்களை தொடர்ந்து, இந்தியா, அந்நாட்டிற்கான சாகர் பந்து உதவி நடவடிக்கைகளை மேற்கொண்டு வரும் நிலையில், அண்டை நாடுகளுக்கு முக்கியத்துவம் அளிப்பதான, இந்தியாவின் கொள்கை நிலைப்பாட்டை வெளிப்படுத்தும் வகையில், இப்பயணம் அமைந்து இருப்பதும் குறிப்பிடத் தக்கது.

---------------------------

சி.பி.ஆர் 1 (4)

2047ஆம் ஆண்டிற்குள், முன்னேறிய நாடாக இந்தியாவை மேம்படுத்தும் கனவை நனவாக்குவதில், அரசு ஊழியர்கள் முக்கிய பங்காற்றுவார்கள் என்று, குடியரசுத் துணைத் தலைவர் திரு.சி.பி ராதாகிருஷ்ணன் கூறியுள்ளார். இதுகுறித்து கூடுதல் விவரங்கள்....

(வாய்ஸ்)

சி.பி.ஆர் 2 (12)

(வாய்ஸ்)

இந்தியப் பாதுகாப்புக் கணக்கியல் சேவைக்கு தேர்ந்தெடுக்கப்பட்டு, தற்போது பயிற்சியில் உள்ள அதிகாரிகள், இன்று புதுடெல்லியில், குடியரசுத் துணைத் தலைவரை சந்தித்தனர். அப்போது அவர் பேசுகையில், சேவை மனப்பான்மை, மற்றும் கடமை உணர்வையே, அரசு ஊழியர்கள் வழிகாட்டியாக கொள்ள வேண்டும் என்றார். அரசுப் பணம் என்பது, கடினமாக உழைத்து மக்கள் வழங்கிய வரிப் பணம் என்பதால், அதிகாரிகள் தங்களின் செயல்பாடுகளில், உயர்தர நீதி, நேர்மை, வெளிப்படைத் தன்மை, மற்றும், பொறுப்புணர்வைப் பராமரித்தல் அவசியம் என்று அவர் வலியுறுத்தினார். குறிப்பாக, பாதுகாப்புப் படைகளின் போர் ஆயத்த நிலையை உறுதிப்படுத்துவதில், விவேகமான நிதி மேம்பாட்டிற்கு, முக்கிய இடம் இருப்பதாக, குடியரசுத் துணைத் தலைவர் திரு. சி.பி. ராதாகிருஷ்ணன் மேலும் குறிப்பிட்டார்.

---------------------------

பாதுகாப்பு ஒப்பந்தம் (7)

பாதுகாப்பு, மற்றும், உள்நாட்டு பாதுகாப்பு தொடர்பான, கல்வி, ஆராய்ச்சி, பயிற்சி, மற்றும், தொழில்நுட்பங்களில் ஒத்துழைக்க, பாதுகாப்பு ஆராய்ச்சி, மற்றும், அபிவிருத்திக் கழகம், ராஷ்ட்ரீய ரக்க்ஷா பல்கலைக் கழகத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்து கொண்டுள்ளது. சுயசார்பு இந்தியா நோக்கங்களுக்கு ஏற்ப, பாதுகாப்புத் தொழில்நுட்பங்களில்,

சுயசார்பை எட்ட, இந்த ஒப்பந்தம் உதவிகரமாக இருக்கும் என, சம்பந்தப்பட்ட வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

---------------------------

ஸ்டாலின் (8)

தமிழகத்தில், காவல், தீயணைப்பு, மற்றும், பள்ளிக் கல்வித் துறை சார்பில், 274 கோடி ரூபாய் செலவில் கட்டப் பட்டுள்ள, புதிய கட்டிடங்களை, முதலமைச்சர் திரு. மு.க. ஸடாலின், சென்னை தலைமை செயலகத்தில் இருந்து, காணொலிக் காட்சி மூலம் திறந்து வைத்தார். கடலூர் மாவட்டம் மஞ்சக்குப்பம், மற்றும், விழுப்புரம் மாவட்டம் கெடார் கிராமத்தில், புதிதாக கட்டப் பட்டுள்ள 2 மாதிரி பள்ளி கட்டிடங்கள், மற்றும், விடுதிகளும் கடலூர், விழுப்புரம் உள்ளிட்ட 20 மாவட்டங்களில், 60 அரசு பள்ளிகளுக்கான 392 வகுப்பறை கட்டிடங்களும், இதில் அடங்கும்.

---------------------------

உதயநிதி (10)

தமிழகத்தில் உள்ள திமுக அரசு, சிறுபான்மையினர் உட்பட அனைத்துத் தரப்பினருக்கும், துணை நிற்கும் வகையில் செயல்பட்டு வருவதாக, துணை முதலமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் கூறியுள்ளார். சென்னை துறைமுகம் பகுதியில் இன்று நடைபெற்ற கிறிஸ்துமஸ் விழா நிகழ்ச்சியில், நலத்திட்ட உதவிகளை பயனாளிகளுக்கு வழங்கி அவர் உரையாற்றினார். தொடர்ந்து மெரீனா கடற்கரை பகுதியில், வீடற்றவர்களுக்கான இரவு நேர காப்பகத்தையும் அவர் திறந்து வைத்தார். 86 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில், அடிப்படை வசதிகளுடன் கட்டப் பட்டுள்ள, இக்காப்பகத்தில் 100 பேர் தங்க முடியும் என, தமிழக அரசு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

---------------------------

*ரங்கசாமி சந்திப்பு (8)*

அண்மையில் மாஸ்கோவில் நடைபெற்ற, ரோபோட் யுத்தம் என்னும் சர்வதேச போட்டியிலும், தொடர்ந்து அபுதாபியில் நடைபெற்ற, எதிர் காலத்திற்கான விளையாட்டுகள் என்னும் சர்வதேச போட்டியிலும், கலந்து கொண்ட இரண்டிலும் 3ஆம் பரிசு பெற்ற, புதுச்சேரியைச் சேர்ந்த DS Robotics அணியினர், அதன் தலைவர் சஞ்சீதன் தலைமையில், இன்று முதலமைச்சர் திரு. ரங்கசாமியை, அவரது அலுவலகத்தில் சந்தித்து வாழ்த்து பெற்றனர். வளர்ந்து வரும் புதிய வகை விளையாட்டை முன்னெடுத்துள்ள இந்த 6 உறுப்பினர் அணியை, முதலமைச்சர் திரு. ரங்கசாமி பாராட்டினார்.

---------------------------

*ராமானுஜம் (10)*

இன்று கணித மேதை ராமானுஜம் பிறந்த நாள், தேசிய கணித தினமாக கொண்டாடப் படுகிறது. தமிழகத்தைச் சேர்ந்த கணித மேதை ராமானுஜம் கண்டறிந்த புதிய கணிதக் கோட்பாடுகள், உலக அளவில் அனைவருக்கும் வியப்பூட்டியதாக, மத்திய தகவல்-ஒலிபரப்புத் துறை இணையமைச்சர் டாக்டர் எல். முருகன், கூறியுள்ளார். இத்தகைய கணித கண்டுபிடிப்புகளால், எப்போதும் போற்றுதலுக்கு உரியவராகத் திகழும் கணித மேதை ராமானுஜத்தை, வணங்குவதாக அவர் குறிப்பிட்டுள்ளார். இந்நாளை ஒட்டி, கும்பகோணம் சாஸ்த்ரா பல்கலைக்கழகம், அமெரிக்காவைச் சேர்ந்த கணிதவியல் நிபுணர் டாக்டர் அலெக்சாண்டர் ஸ்மித்-திற்கு, ஸ்ரீனிவாச ராமானுஜம் விருது வழங்கி சிறப்பித்துள்ளது.

---------------------------

வானிலை (11)

தமிழ்நாடு, மற்றும், புதுச்சேரி-காரைக்கால் பகுதிகளில், நாளை வரை, வறண்ட வானிலையே நிலவும் என்றாலும், 24,25 ஆகிய தேதிகளில், கடலோர தமிழகத்தில் ஓரிரு இடங்களிலும், புதுச்சேரி-காரைக்கால் பகுதிகளிலும், லேசானது முதல், மிதமான மழை பெய்யக் கூடும் என சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. அதிகாலை

வேளையில் ஓரிரு இடங்களில், லேசான பனிமூட்டம் காணப்படும் என்றும் தெரிவிக்கப் பட்டுள்ளது. இதற்கிடையே, கடந்த 24 மணி நேரத்தில், அதிகபட்ச வெப்பநிலையாக ஈரோட்டில், 32.6 டிகிரி செல்சியஸ் வெப்பநிலை பதிவாகி உள்ளது. சமவெளிப் பகுதிகளை பொருத்தவரை, குறைந்தபட்ச வெப்பநிலையாக, கரூர் பரமத்தியில், 17 டிகிரி செல்சியஸ் வெப்பநிலை பதிவாகி உள்ளது.

---------------------------

கிரிக்கெட் (4)

மகளிர் கிரிக்கெட்டில், இந்தியா-இலங்கை அணிகளுக்கு இடையிலான, 2ஆவது 20 ஓவர் போட்டி, விசாகப்பட்டினத்தில் நாளை நடைபெற உள்ளது. 5 போட்டிகள் கொண்ட இத்தொடரில் இந்தியா தற்போது1க்கு-பூஜ்யம் என்ற கணக்கில் முன்னிலையில் உள்ளது.

---------------------------

ஆரவல்லி பூபேந்தர் (10)

ஆரவல்லி மலைத் தொடர் பகுதியில் ஏற்கனவே, ஆஜ்மீர், உதய்பூர் போன்ற பல நகரங்கள் உள்ள நிலையில், இப்பகுதியை மேலும் நகரமயமாக்க, திட்டம் எதுவும் அரசுக்கு இல்லை என்று, மத்திய சுற்றுச் சூழல் மற்றும் வனத் துறை அமைச்சர் திரு. பூபேந்தர் யாதவ் கூறியுள்ளார். இன்று புதுடெல்லியில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், ஆரவல்லி மலைத் தொடரை, பாதுகாக்கப்பட்ட பகுதியாக உச்சநீதிமன்றம் அறிவித்து இருப்பதாகவும், இதற்கு ஏற்ப, கடுமையான விதிமுறைகளை மாநில அரசுகள் உருவாக்க வேண்டும் என்றும் கூறினார். ஆரவல்லி மலைத் தொடரை ஒட்டிய 90 சதவிகித பகுதிகளில், சுரங்கப் பணிகளுக்கு சாத்தியம் இல்லை என்றும் அவர் தெரிவித்தார்.

---------------------------

நேஷனல் ஹெரால்ட் (7)

நேஷனல் ஹெரால்ட் வழக்கு தொடர்பான, பணச் சலவை வழக்கை விசாரணைக்கு எடுத்துக் கொள்ள, கீழ் நீதிமன்றம் மறுத்து விட்டதை

ஆட்சேபித்து, அமலாக்கத் துறையால் பதிவு செய்யப்பட்ட மேல்முறையீட்டு மனு மீது, டெல்லி உயர்நீதிமன்றம் இன்று மூத்த காங்கிரஸ் தலைவர்கள், திருமதி சோனியா காந்தி, திரு. ராகுல்காந்தி ஆகியோருக்கு நோட்டீஸ் அனுப்பி உள்ளது. அடுத்தக் கட்ட விசாரணைகள், அடுத்த ஆண்டு மார்ச் 12ஆம் தேதிக்கு ஒத்தி வைக்கப் பட்டுள்ளன.

---------------------------

*மீண்டும் தலைப்புச் செய்திகள்*

இந்தியாவிற்கும், நியூசிலாந்திற்கும் இடையிலான, வரியில்லா வர்த்தக உடன்பாட்டினால், அடுத்த 5 ஆண்டுகளில் இருதரப்பு வர்த்தகம், 2 மடங்காக அதிகரிக்கும் என்று, பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

நியூசிலாந்தின் அதிநவீன வேளாண் தொழில்நுட்பங்கள் இந்தியாவிற்கு கிடைக்கும் வகையில், தகைசால் மையங்கள் அமைக்கப்படும் என்று மத்திய தொழில்-வர்த்தக அமைச்சர் திரு. பியூஷ் கோயல் தெரிவித்துள்ளார்.

வெளியுறவு அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர், பிரதமரின் சிறப்பு தூதராக நாளை இலங்கை செல்ல இருக்கிறார்.

முன்னேறிய நாடாக இந்தியாவை மேம்படுத்தும் கனவை நனவாக்குவதில், அரசு ஊழியர்கள் முக்கிய பங்காற்றுவார்கள் என்று, குடியரசுத் துணைத் தலைவர் திரு.சி.பி ராதாகிருஷ்ணன் கூறியுள்ளார்.

இத்துடன் இந்த செய்தி அறிக்கை நிறைவு பெறுகிறது